IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.64/2023

Deposition of Witness for PW1

Name : திருமதி. செல்ல நாடச்சி.

Father Name :

Age :

Calling :

Village :

Taluk :

District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.08.2024.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். சத்தியபிரமாணத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 05.12.2006 ம் தேதியிட்ட வழக்கு பட்டிகைச் சொத்தில் அயிட்டம் எண்.1 ற்கான எனது பெயரில் உள்ள விலை கிரய ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1. அந்த சொத்தினை நான் எனது மகன் மணிகண்டன் பெயருக்கு எழுதிக் கொடுத்த 03.11.2011 ம் தேதியிட்ட இஷ்டதான பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ.2. 15.10.2008 ம் தேதியிட்ட இறந்து போன எனது மகன், மணிகண்டன் அவரது பெயரில் வாங்கிய கிரய ஆவணம் இணையதள நகல் வா.சா.ஆ.3. 29.05.2013 ம் தேதியிட்ட இறந்து போன எனது மகன், மணிகண்டன் அவரது பெயரில் வாங்கிய 3 வது அயிட்ட சொத்தின் கிரய ஆவணம் இணையதள நகல் வா.சா.ஆ.4. 15.07.2020 ம் தேதியிட்ட 1 வது பிரதிவாதி பெயரக்கு நான் எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ.5. 26.04.2022 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி பெயருக்கு, 1 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் இணையதள நகல் வா.சா.ஆ.6. 28.10.2020 ம் தேதியிட்ட தக்கலை சார்பு ஆட்சியாளரிடம் நான் கொடுத்த மனுவின் நகல் வா.சா.ஆ.7. 18.01.2023 ம் தேதியிட்ட நான் நாகர்கோவில், நில அபகரிப்பு

காவல் ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.8. பிராதுப்படி தீர்ப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.